விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 077 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 22 வியாழக்கிழமை (06.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பாட்டியின் மாத்திரையை உட்கொண்ட ஒன்றரை வயதுக் குழந்தை உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பாட்டியின் மாத்திரையை உட்கொண்ட ஒன்றரை வயது ஆண்குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்குவாரிப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அன்ரனி சஞ்சித் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இலஞ்சம் வாங்கிய பொலிஸ் அதிகாரியின் மகன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரியின் மகன் ஒருவர் இலஞ்சம் வாங்கிய நிலையில் அது தொடர்பில் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிய வருகையில்,

வட்டுக்கோட்டை- மூளாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 3ஆம் திகதி மதுபானம் பாவித்துவிட்டு முரண்பாட்டில் ஈடுபட்டவேளை, யாழ்ப்பாணம் நகர் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அந்த வழக்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் தனிமையில் வசித்த குடும்பஸ்தர்

### நேற்று சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் தனிமையில் வசித்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் மருதடி வீதியைச் சேர்ந்த வசந்தன் (வயது-41) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்

15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு மக்களுக்கு நல்லது நினைத்தால்

# சட்டவிரோத மீன்பிடியை இந்தியா தடுக்க வேண்டும்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைத்தால் சட்டவிரோத மீன் பிடியை இந்தியா தடுக்க வேண்டும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

15ஆம் பக்கம் பார்க்க

### லண்டனில் விபத்து

## முல்லையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மரணம்

(லண்டன்)

லண்டனில் இடம்பெற்ற வீதி விபத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பேரவை உறுப்பினர்களாக 16 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்னவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

05.03.2025 முதல் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குச் செயற்படும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் விபரம் வருமாறு,

பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ்

15ஆம் பக்கம் பார்க்க

### ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

## பாராளுமன்றத்தில் நேற்று கடும் வாய்த்தர்க்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

நேற்றைய பாராளுமன்ற அமர்வுகளின்போது பிரதி அமைச்சர் ரத்னகமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வேதாராச்சி இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## 679 முப்படை வீரர்கள் இதுவரை கைது

(கொழும்பு)

இராணுவ சேவையிலிருந்து தப்பியோடிய 679 முப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களில் முப்படை

15ஆம் பக்கம் பார்க்க

## 'வடக்கின் போர்'

### இன்று ஆரம்பம்




15ஆம் பக்கம் பார்க்க

## மேர்வின் சில்வா கைது



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்றிரவு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கிரிபத்கொட பகுதியில் வியாபார நிலையங்களை வழங்கிய சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு. வேலுப்பிள்ளை விவேகானந்தன்

(பிரபல வர்த்தகர், நிஷா பாதணி விநியோகஸ்தர்)



மலர்வு 18.02.1945 உதிர்வு 05.03.2025

வதிரி திருவெண்பாதியைப் பிறப்பிடமாகவும் ராணி மஹாலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விவேகானந்தன் அவர்கள் நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -அம்மாப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் அமரர் வே.கிருஸ்ணானந்தன், அமரர் வே.சதானந்தன், திருமதி இ.இந்திராணி, வே.கிருபானந்தன், அமரர் வே.ரூபானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி சாருமதி மோகனரங்கன் (பிரான்ஸ்), திரு.வி.சாரங்கன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி, வலயக்கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்). திருமதி கௌசிகா விஜேந்திரன் (ஆசிரியை -யா/வட இந்து மகளிர் கல்லூரி), திருமதி நிஷாந்தி நரேந்திரன் (சுவிஸ்), திருமதி மயூரி சுமன் (ஆசிரியை - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு. பா.மோகனரங்கன் (பிரான்ஸ்), திருமதி சா.துஷாந்தினி, திரு.லோ.விஜேந்திரன் (கனடா), திரு.நா.நரேந்திரன் (சுவிஸ்), திரு.சு.சுமன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மோ.சித்தார்த், மோ.சாருக்ஷன், மோ.சாருதி, சா.தன்ஷிகா, சா.ஜருக்ஷிகா, வி.கௌஷீரா அஞ்சலி, ந.ஜஸ்வந்த், ந.லக்கீராஞ்சலி, ந.அபிஸ்வா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் திருமதி கி.விஜேயரத்தினம், அமரர் சி.க.இராஜேந்திரன் (கிளாக்கர் ஐயா), திருமதி கி.புஸ்பராணி (ஓய்வுநிலை ஆசிரியை), திருமதி ரூ.ராகினி, அமரர்களான த.இரத்தினசிங்கம் (ஆசிரியர்), த.துரைராஜசிங்கம், த.இராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2025) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2386)

---

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

### வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவ ஏற்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் -2025

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.04.2025 ஆம் திகதி சிறப்பாக நடைபெற உள்ளது.

பொங்கல் உற்சவ ஒழுங்கமைப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. சு. முரளிதரன் அவர்களின் தலைமையில் எதிர்வரும் 07.03.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், உற்சவ கால உபயகாரர்கள் மற்றும் தர்மகர்த்தாக்கள், உற்சவகால பணியில் ஈடுபடும் தொண்டர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு இறையன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் - க.குகதாசன்
செயலாளர் - தி.பிரபாகரன் 077 317 9847

(C-2384)

---

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 28.02.2025 இல் நடைபெற இருந்து, காலநிலை சீரின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு நாளை 07.03.2025 வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.


அதிபர்
யா/கனகரத்தினம் ம.ம.வி.

(C-2385)

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 1948 - 04 - 06



இறப்பு 2025 - 03 - 05

## சதாசிவம் தவானந்தராஜா(தருமு)

முதலாம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.24, சபாபதிலேன் தலையாழியினை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தவானந்தராஜா அவர்கள் நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும் சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வத்சலா(ஆசிரியை - தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), கௌரிகன்(லண்டன்), ஸ்ரீவித்தியா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிதாகரன் (தினக்குரல்), சுரேசினி(லண்டன்), திருச்செல்வம் ஆகியோரின் மாமனாரும் நிவேதன், நிதிலன், லுஜித், வினுஷன், சுஜீபன், சுகீதன் ஆகியோரின் அன்புப் பேரனும் தில்லைநாயகி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தவபலநாதன், சற்குணசிங்கம் மற்றும் பரமேஸ்வரி (ராசாத்தி,கனடா), காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, வசந்தகுமாரி, செந்தில்மணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சச்சிதானந்தம் மற்றும் சுந்தரமூர்த்தி(ஜேர்மனி), சரவணபவன், நாகேஸ்வரி(ஜேர்மனி), செல்வராஜா(சுவிஸ்), மகேஸ்வரி(லண்டன்), புவனேஸ்வரி(ஜேர்மனி), சாருகாசினி(சுவிஸ்), காலஞ்சென்ற தருமரத்தினம்,யோகவதி, விஜியலட்சுமி, வைரவநாதன், புனிதவதி மற்றும் காந்தரூபி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 07.03.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(3586) தகவல்: குடும்பத்தினர்

---

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்

இடம் : யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
காலம் : 23.03.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி

புதிய நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவும், புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதலும் இடம்பெறும். கல்லூரியின் பழைய மாணவிகள் அனைவரும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
அதிபர்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(C-2379)

---




இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில்

மதிசுதாவின்

வெந்து தணிந்தது காடு

திரையிடலும் கலந்துரையாடலும்

09.03.2025 (ஞாயிற்றுக்கிழமை)

இடம் : ஈழத்திரை
செல்வா மினி திரை அரங்கம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நேரம் : காலை 10 மணி


ஈழ சினிமா ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(3584)

SCOPE Strengthening Social Cohesion and Peace in Sri Lanka
german cooperation
giz

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஸ்பீட் கண்'
## சாரதிகளுக்கு ஆப்பு



(கொழும்பு)

**போக்குவரத்து விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 'ஸ்பீட் கண்' சாதனங்கள் இலங்கை பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.**

இரவில் மிகவும் திறம்பட பயன்படுத்தக்கூடிய இந்த சாதனம், சுமார் 1 கிலோமீற்றர் தொலைவில் கூட ஒரு வாகனத்தை கண்டுபிடிக்கும் திறன் கொண்டது என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த முறை மூலம் பதிவு செய்யப்பட்ட காணொளியை நீதிமன்றத்தில் ஆதாரமாக சமர்ப்பிக்கவும் முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வாகனம் செலுத்தப்பட்ட வேகம், சாரதியின் புகைப்படம், வாகனம் செலுத்தியவரின் உரிமத் தகடு எண் உள்ளிட்ட பல தகவல்களைப் பெற முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

# பிறவிக்குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளின் வீதம் அதிகரிப்பு!
## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 3 இலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன.

எனினும் அவர்களில் சுமார் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரத்துக்கு இடைப்பட்ட குழந்தைகள் பிறவிக் குறைபாடு நோய்களுடன் பிறப்பதாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டதாக விசேட வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

சர்வதேச பிறவிக் குறைபாடு நோய் தினத்தை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சங்கத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் முதன் முறையாக 2006 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் பிறவிக் குறைபாடு நோய்கள் தொடர்பில் விசேட ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

18 ஆயிரம் குழந்தைகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வின் போது நாட்டில் சிசு இறப்பு வீதம் குறைவடைந்துள்ளதுடன், பிறவிக் குறைபாடு நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளின் வீதம் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்தோடு வருடா வருடம் நாட்டின் பிறப்பு வீதமும் கணிசமான அளவில் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் உயிரிழப்புக்கு 39 சதவீதம் பிறவிக் குறைபாடு நோய்களே பிரதான காரணமாக உள்ளது.

வெளிப்பார்வைக்கு புலப்படும் வகையிலும், எமது பார்வைக்கு அப்பாற்பட்டு உடல் உறுப்புச் சார்ந்த பகுதிகளில் ஏற்படும் குறைபாட்டு நோய்களும் உள்ளன.

பிறவிக் குறைபாடு நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதுடன் உரிய சிகிச்சைகளை முறையாக பெறும் பட்சத்தில் நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ள முடியும்.


யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, பேராதனை வைத்தியசாலை, கொழும்பு சிறுவர் வைத்தியசாலை, கராபிட்டிய தேசிய வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் விசேடமாக சிறுவர்களின் பிறவிக் குறைபாடு நோய் தொடர்பில் உரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. பிறவிக்குறைபாடு மற்றும் ஊனக் குறைபாட்டுடன் கூடிய கருக்கலைப்புக்கு இலங்கை அரசாங்கம் இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. (நி-8)


# மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

திரு.இரத்தினம் ரவிச்சந்திரன் (அதிபர்) (SLPS-1)

Spl.Trd(Maths), B.A, Dip. in. Edu, M.Ed, PGDEM, )



எமது பாடசாலையில் அதிபராக அரும்பெரும் பணியாற்றி
06.03.2025 இன்று ஓய்வுபெறும் அதிபரை உளமார வாழ்த்துகின்றோம்.
கணிதச் சுடராய் அறியாமையின் ஒளியாய் அளப்பரிய சேவையாற்றி
அதிபர் சேவையில் செயல் வீரராய்
கண்டிப்பில் தந்தையாய் அறிவினில் ஆதவனாய்
சிந்தையின் வடிவமாய் சிறப்புற பணியாற்றி
பணிநிலை தன்னிலே ஓய்வாய் அகவை தன்னிலே
மணிவிழாக் காணும் உங்களை ஓய்வுக்காலம் சிறப்புற,
ஓய்வில்லா உம்மை ஓயாது இனிதே வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம் (17.08.1988 - 14.02.2001) உதவி ஆசிரியர்
- யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் (15.02.2001 - 21.05.2001) ஆசிரியர்
- யா/ ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தியாலயம் (22.05.2001 - 31.12.2003) ஆசிரியர்
- யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி (01.01.2004 - 22.01.2013) ஆசிரியர்
- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம் (23.01.2013 - 06.07.2016) அதிபர்
- யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் (07.07.2016 - 19.04.2022) அதிபர்
- யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி (20.04.2022 - 05.03.2025) அதிபர்

Best Wishes!

வாழ்த்துவோர்: கல்லூரிச் சமூகம் - யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

(3568)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'விடாமுயற்சி' வில்லியம்சன், ரச்சின் 'வீண் முயற்சி' மில்லர்

## பைனலுக்கு ஜோராக நுழைந்தது நியூசிலாந்து பரிதாபமாக வெளியேறியது தென்னாபிரிக்கா



வில்லியம்ஸன், ரச்சின் ஆகியோரின் அபார துடுப்பாட்டத்தின் பலனாக விளைந்த சதம் நம்பிக்கை ஒளியாக பாய நியூசிலாந்து அணி சம்பியன்ஸ் டிராபி பைனலுக்கு ஜோராக முன்னேறியது.

தென்னாபிரிக்காவுக்கு இறுதிப் போட்டிக்கான அத்தனை கதவுகளும் மூடப்பட்டிருந்த போதிலும் மில்லரின் இறுதி நேர அதிரடித் தாக்குதல் முயற்சி வீண்முயற்சியாகி பலனற்றுப் போன தென்னாபிரிக்காவின் இறுதிப் போட்டிக்கான கனவு 50 ஓட்டங்களால் தகர்ந்து போனது.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடக்கிறது. நேற்று நடந்த இரண்டாவது அரையிறுதியில் "பி" பிரிவில் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்கா, "ஏ" பிரிவில் இரண்டாவது இடம்பெற்ற நியூசிலாந்தை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் சான்ட்னர், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**ரச்சின் அபாரம்**

நியூசிலாந்து அணிக்கு ரச்சின் ரவிந்திரா - வில் யங் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. யங் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் ரச்சின், அனுபவ வில்லியம்சன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். யான்சென் வீசிய 7வது ஓவரில் 3 பவுண்டரி அடித்தார் ரச்சின். தொடர்ந்து மல்டர் (18வது) ஓவரிலும் 3 பவுண்டரி விளாசினார்.

ரபாடா பந்தில் 2 ரன் எடுத்த ரச்சின், இத்தொடரில் இரண்டாவது சதம் எட்டினார். இரண்டாவது விக்கெட்டுக்காக 164 ரன் சேர்த்த போது, ரபாடா பந்தில் ரச்சின் (108) ஆட்டமிழந்தார்.

**வில்லியம்சன் சதம்**

மறுபக்கம் சிறப்பான துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தார் வில்லியம்சன். முல்டர் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய இவர், 91வது பந்தில் சதம் கடந்தார். வில்லியம்சன் 102 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரொம் லதாம் (4), ரபாடா பந்தில் போல்டானார். நிகிடி வீசிய 45வது ஓவரில் 6,4,4 என தொடர்ந்து விளாசினார் மிட்செல். யான்சென் (46வது) ஓவரில் பிலிப்ஸ் 4 பவுண்டரி தொடர்ந்து அடிக்க ஸ்கோர் 300 ஐ கடந்தது.

பின் மிட்செல் (49), பிரேஸ்வெல்(16) ஆட்டமிழந்தனர். கடைசி 10 ஓவரில் 110 ரன் சேர்த்த நியூசிலாந்து அணி 50 ஓவரில் 362/6 ஓட்டங்கள் குவித்தது. பிலிப்ஸ் (49), சான்ட்னர் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**துசென் நம்பிக்கை**

கடின இலக்கைத் துரத்திய தென்னாபிரிக்க அணிக்கு ரிக்கிள்டன் (17), அணித் தலைவர் பவுமா ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. பின் பவுமா - வான்டர் துசென் இணைந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பவுமா அரைச்சதம் அடித்தார். இவருக்கு கைகொடுத்தது சென் 51 வது பந்தில் அரைசதம் எட்டினார்.

**சான்ட்னர் கலக்கல்**

இரண்டாவது விக்கெட்டுக்கு 105 ஓட்டங்கள் சேர்த்த போது, சான்ட்னர் சுழலில் பவுமா (56) வெளியேறினார். தொடர்ந்து மிரட்டிய இவர் துசெனை (69) போல்டாக்க, தென்னாப்ரிக்க அணி தோல்விப் பாதைக்கு திரும்பியது. அடுத்த சில நிமிடத்தில் பெரிதும் நம்பப்பட்ட கிளாசனை, 3 ரன்னில் திருப்பி அனுப்பினார் சான்ட்னர்.

மார்க்ரம் 31 ஓட்டங்கள் எடுக்க போராடிய மில்லர் சதம் அடித்தார். மற்றவர்கள் ஏமாற்றினர். தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 312/9 ரன் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. நியூசிலாந்து அணி பைனலுக்கு முன்னேறியது. (ம-7)

# கால்பந்தாட்டப் போட்டி முடிவுகள்



வயாவிளான் மத்திய கல்லூரி

ஐக்கிய ராஜ்யம் தமிழ் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் நடத்திய 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரியும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

குறித்த போட்டிகளின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது ஆண்களுக்கான போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி வீரர் ரஜீவ் தனது அணிக்காக முதலாவது கோலைப் பதிவு செய்ய, முதல் பாதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி வீரர்கள் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் தமக்கு கிடைத்த மூன்று வாய்ப்புக்களை கோலாக்கத் தவறி விட்டனர். ஆனால் வயாவிளான் மத்திய கல்லூரி அணி வீரர் ரஜீவ் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி மேலும் ஒரு கோலைப் பதிவு செய்தார்.

ஆனால் சற்றும் சளைக்காமல் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி வீரர்கள் வெற்றிக்காக போராடினர். இதன் பயனாக அவ்வணி வீரர் அஸ்வின் மிக நேர்த்தியான கோலைப் பதிவு செய்ய ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. அதன் பின்னர் இரு அணிகளும் பலமுறை முயற்சித்த போதிலும் இரு அணி[illegible] கோல் களைப் பதிவு [illegible]ல்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இதில் ஆட்ட நாயகனாக வயாவிளான் மத்திய கல்லூரி அணி வீரர் ரஜீவ், தொடர் ஆட்ட நாயகனாக இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி வீரர் அஸ்வின், சிறந்த கோல் காப்பாளராக வயாவிளான் மத்திய கல்லூரி அணி வீரர் ஆகாஷ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேவேளை பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் மகாஜனாக் கல்லூரி வீராங்கனை கல்ஷிகா இரு கோல்களைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் மகாஜனாக் கல்லூரி அணியின் ஆதிக்கம் மேலோங்கிய போதிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினர் மிகச் சிறப்பாக ஈடு கொடுத்து விளையாடினர்.

இருப்பினும் மகாஜனாக் கல்லூரி வீராங்கனை கல்ஷிகா மீண்டும் இரு கோல்களை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் மகாஜனாக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு சங்கம் தலைவர் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பெ.வசந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மகாஜனாக் கல்லூரி ஓய்வு நிலை அதிபரும் முன்னாள் யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவருமான ம.மணிசேகரன் கலந்து கொண்டார். (6-8-90)



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டில் போட்டியிட பலர் ஆர்வம் – சாகர



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது கட்சியில் போட்டியிட பலர் ஆர்வம் காட்டி வருவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டு மக்கள் பொய்களுக்கு ஏமாறமாட்டார்கள் என்பது தற்பொழுது தெளிவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாதவர்கள் மட்டுமே இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிட உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# யோஷித்தவின் பாட்டி கைது



(கொழும்பு)

யோஷித்த ராஜபக்ஷவின் பாட்டி டெய்சி பொரெஸ்ட் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு நேற்றுக் காலை சென்றிருந்த போதே டெய்சி பொரெஸ்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட டெய்சி பொரெஸ்ட் கடுவலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-8)

# மதுபோதையில் சாரத்தியம் இ.போ.ச சாரதி கைது



(கொழும்பு)

மது போதையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தை செலுத்திச் சென்ற சாரதி ஒருவர் வெல்லவாய பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


வெல்லவாய பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

தணமல்வில பகுதியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தின் சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பேருந்தில் பயணித்த பயணிகள் அனைவரும் மற்றுமொரு பேருந்தில் ஏற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றும்
ம.கனித்தமிழ் அவர்களின்
தந்தையார்
திரு. மார்க்கண்டு மகாதேவன்
அவர்கள் 02.03.2025 அன்று
இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(8571) ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ இணுவில் இந்துக்கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் கல்வி வலயத்தின்
உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளரும்
பதில் கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான
விவேகானந்தன் சாரங்கன்
அவர்களின் பாசமிகு தந்தை
அமரர். வேலுப்பிள்ளை விவேகானந்தன்
அவர்கள் 05.03.2025 புதன்கிழமை
அன்று இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 18.02.1945 மறைவு 05.03.2025

(C-2381) துயரில் பங்கெடுக்கும்: யாழ் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

# இராசிபலன்

06.03.2025
மாசி 22, வியாழக்கிழமை
சப்தமி பிற்பகல் 4.00 மணிவரை

ரோகிணி பின்னிரவு 4.42 மணிவரை
சுபநேரம் 7.55 - 9.25 மணிவரை
இராகுகாலம் 1.55 - 3.25 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி

வளவன்

**மேஷம்:** வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்கள் பார்க்காமல் இருந்த ஒருவரை சந்திக்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** தொழில் ரீதியான அலைச்சல்கள் ஏற்படலாம், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனை களைக் கேட்டு நடப்பது நல்லது.

**கடகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர்கள் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும்.

**கன்னி:** தொழிலில் எதிரியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் பெருமைகளை காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், விட்டுக் கொடுத்துச் செல்வதால் முன்னேற்றம் கிடைக்கும், பிரயாண பயமுண்டு, உடல் நலத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம்

**தனுசு:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முனைவீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தாய்வழி உறவுகளின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், மனதில் தோன்றுவதை செய்வீர்கள்.

**மீனம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**தனது திறமைகளை காலத்தில் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்தவனே அறிவாளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காட்சியும் விற்பனைக் கூடமும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள்" (சமத்துவம், அதிகாரமளித்தல், அனைவருக்கும் சம உரிமைகள், அதிகாரம் மற்றும் வாய்ப்புக்களைத் திறக்கக்கூடிய நடவடிக்கை மற்றும் யாரும் பின்தங்காத பெண்ணிய எதிர்காலம்) எனும் தொனிப் பொருளை முன்னிலைப் படுத்தி நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் சர்வதேச மகளிர் தினவிழா இடம்பெறவுள்ளது.

இதன்போது மகளிர் சேவை வழிகாட்டல் கூடங்களும் பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கமளிக்கும் முகமாக உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனைக் கூடங்களும் நாளை மற்றும் நாளை மறுதினம் என இரு நாட்களும் காலை முதல் மாலை வரை குறித்த வளாகத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## யாழ்.பல்கலையில் 3 ஆவது சர்வதேச இந்து மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடம் "இந்துக்கலைகள் ஒரு பன்முக பார்வை" என்னும் தொனிப் பொருளில் நடத்தும் 3 ஆவது சர்வதேச இந்து மாநாடு-2025 இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ.ச. பத்மநாபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

ஆய்வடங்கல் வெளியீடு, விருது வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் பி.ப 1 மணிக்கு ஆய்வரங்க அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

மாநாட்டின் 2 ஆம் நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது கலைஞர் கௌரவிப்பு, இசையரங்கு, நாட்டாரிசை போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## கைத்தொழில் அமைச்சர் யாழிற்கு நாளை விஜயம்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி யாழ்ப்பாணத்திற்கு நாளை விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, கைத்தொழில் துறை அபிவிருத்திக்காக சிறப்புப் பார்வையிடுவதோடு, தொழிற்சாலைகள் மற்றும் தொழில்பேட்டைகள் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. (6-8)

## கடல் வளங்களை சுரண்டும் சட்டவிரோதிகளை தண்டியுங்கள்

### சபையில் ரவிகரன் எம்.பி



(கொழும்பு)

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை சுரண்டும் இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்படுத்துக, இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025 வரவு செலவுத்திட்ட கடற்றொழில் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடக்குப்பகுதியில் 5 மாவட்டங்களில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய நான்கு மாவட்டங்களில் மீன்பிடியாளர்கள் தமது முழுமையான வாழ்வாதாரமாக மீன்பிடியையே நம்பியுள்ளனர்.

இந்நிலையில் சட்டவிரோத கடற்றொழில்களைச் செய்து மீனவர் சமூகத்தை அழித்துக் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள சட்டவிரோதிகளையும், எல்லைதாண்டிவந்து எமது கடல்வளங்களை அழிக்கும் அயல்நாட்டு சட்டவிரோதிகளையும் தண்டியுங்கள்.

இல்லையேல் வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி நான்கு மாவட்டங்களிலும் மீனவ மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டாம் எனவும் இதன் போது தெரிவித்தார். (6-8)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 15<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: HND (Agriculture), AI<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15179 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14345 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: 7 1/2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc(IT),IT Technician<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15181 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 11/2<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14350 |
| பிறப்பு: 1992 RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Banking Course,LLB,Executive Officer (Bank)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15183 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, pvt<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரசதொழில்,விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14366 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வல்லையில் பெண் ஒருவரின் சங்கிலி அறுப்பு

### ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வல்லைப் பகுதியில் வைத்து அறுத்து செல்லப்பட்ட சங்கிலியுடன் சந்தேக நபர் ஒருவர் சாவகச்சேரியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று 8.25 மணியளவில் வடமராட்சி வல்லைப் பகுதியில் வைத்து, நெல்லியடி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தனியார் நிதி நிறுவன பெண் ஊழியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிள் வந்த இருவர் அறுத்து சென்றுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை குறித்துக் கொண்ட பெண் இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார், சங்கிலி அறுப்பு கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி நகரில் உள்ள பிரபல நகையகத்திற்கு முன்பதாக நிற்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலினையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் அந்நபரை கைது செய்துள்ளனர்.

அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலியை சாவகச்சேரியில் உள்ள பிரபல நகை வியாபார நிலையத்தில் விற்பனை செய்து சிட்டையையும் பெற்றுக் கொண்டுள்ளார். மேலும் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில் நகையை மீட்ட பொலிஸார் அதனை உரிமையாளரிடம் காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கைதான சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8-60)

## இறைநிலை குரு வழிபாடு

(யாழ்ப்பாணம்)

தெய்வீக ஆத்மீகஞானி பொன்னையா நடராசா (சச்சிதானந்தர்), துணைவியார் ந.பாக்கியலட்சுமி ஆகிய இருவரினதும் இறை நிலை எய்திய 12 ஆவது ஆண்டு இறை நிலை குரு வழிபாடு இன்று வியாழக்கிழமை கொக்குவில், தாவடி தெற்கு, பத்தாவையில் இடம்பெறவுள்ளது. (6-8)

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணங்களை அதிகரிக்குமாறு ஐ.எம்.எப் பரிந்துரை

(கொழும்பு)

**இலங்கை மின்சார சபையின் கடன் தொகை மீண்டும் அதிகரித்துச் செல்லும் அபாயம் காணப்படுவதனால் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் புவர் பரிந்துரையை முன்வைத்துள்ளார்.**

கடந்த ஜனவரி மாதம் இலங்கை மின்சாரசபை மின் கட்டணத்தில் திருத்தம் செய்திருந்தது. இந்தநிலையில், குறித்த திருத்தத்தினால் மின் உற்பத்தி செலவுகள் கட்டணத்தினால் ஈடு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதாக பீட்டர் புவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கை மின்சாரசபை நட்டமடையக் கூடிய சாத்தியங்கள் மிக அதிகம் என தெரிவித்துள்ளார்.

குறிப்பாக புதிய கட்டணங்களின் காரணமாக செலவுகளை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை மின்சார சபையின் கடன் தொகை மீண்டும் அதிகரித்துச் செல்லும் அபாயம் காணப்படுவதாகவும் அவ்வாறு கடன் அதிகரித்தால் இலங்கை மின்சாரசபை அரசாங்கத்திற்கு சுமையாக அமையக் கூடும் எனவும் பீட்டர் புவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். எனவே மின்சார சபையின் செலவுகளை ஈடு செய்யக் கூடிய வகையில் மின்கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

நட்டம் அடையாத வகையில் விலை நிர்ணயம் செய்யக்கூடிய விலை பொறிமுறைமையொன்று காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)


## மணிவிழா வாழ்த்துக்கள்




திரு.
**இ.ரவிச்சந்திரன்**
(அதிபர்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)

05.03.2025 இல் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்று இன்று மணிவிழா காணும் எமது கோப்பாய் கல்விக் கோட்டத்தின் சிரேஷ்ட அதிபர் **திரு.இ.ரவிச்சந்திரன்** அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2380)

வாழ்த்துவோர்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள் சங்கம்,
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.



## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு
## திருமுறிகண்டி கடை மற்றும் ஒலுமடு கடைகளுக்கான நீண்ட கால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2025

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான திருமுறிகண்டி கடை மற்றும் ஒலுமடுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் என்பன நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம்** :- 06.03.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 20.03.2025 பிற்பகல் 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி** :-21.03.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி வரை

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி** :- 21.03.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம்** :- புதுக்குடியிருப்பு பிரதேசசபை, தலைமை. அலுவலகம்

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| திருமுறிகண்டி கடைகள் | | | | |
| கடை இல 05 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 2,000.00 |
| ஒலுமடு கடைகள் | | | | |
| கடை இல 01 | ரூபா. 900,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 3750.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 1,200,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 5000.00 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் **புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள்** நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **ஒலுமடு கடை இல. , திருமுறிகண்டிக் கடை இல...** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **21.03.2025 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்** கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் (கறுப்புப்பட்டியல்) கேள்விப்பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
7. சித்திகரக் குத்தகைக்காரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையை செலுத்துதல் வேண்டும்.
8. ஒப்பந்தத்தின் பின்னர் குறித்த கடைக்கான மின்சார இணைப்பினை தாங்களே பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
9. முற்குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச்செய்யப்படாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப் படுத்தப்படும்.
10. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள், மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. பிரதேசசபை சட்டங்களுக்கு அமைவாக ஒப்பந்தம் தொடர்பாக செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்பட வேண்டும்.
13. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்புபிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**2025.03.06**
**தொலைபேசி இல:-021 229 1023**
email:[illegible].com

(சி-2382)


# சந்தைகளில் பாவனைக்கு உதவாத தே.எண்ணை

(கொழும்பு)

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற அசுத்தமான தேங்காய் எண்ணெய் உள்ளூர் சந்தையில் நுழைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயைப் பெற்று உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதில் இறக்குமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் திருத்தப்படும் என்றும் மோசடிகளைத் தடுக்க வலுவான விதிகள் மற்றும் விதிமுறைகள் கொண்டு வரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# மாவட்ட அதிகாரிகளுக்கு அழைப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்கள் கோரப்பட்டதையடுத்து முதற்கட்ட பணிகளை ஆரம்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகளை கொழும்புக்கு அழைக்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கலந்துரையாடலை நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் இன்று நடைபெறும் தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான வேட்புமனுக்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைய்யம் கூடுவது இதுவே முதல் முறை ஆகும். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# “காசா மீண்டும் கட்

# ட்ரம்பின் தி

## எதிராக திரண்ட அர

(ஜெருசலேம்)

**பாலஸ்தீன அதிகாரசபையின் எதிர்கால நிர்வாகம் காசா பகுதியை கட்டியெழுப்பும் திட்டத்தை அரபுத் தலைவர்கள் முன்மொழிந்துள்ளனர். காசாவை முழுமையாக கைப்பற்றி அதனை மீண்டும் கட்டியெழுப்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த திட்டத்திற்கு மாற்றாக இத் திட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.**




எகிப்திய தலைநகர் கெய்ரோவில் நேற்று முன் தினம் செவ்வாயன்று நடந்த ஒரு உச்சிமாநாட்டில் அரபுத் தலைவர்களால் 53 பில்லியன் அமெரிக்க டொலர்



திட்
பட்ட
அ
“கை
யனு
தீனி
வே
டொ
னை
தல்
மு
யாக
பகுதி
நிலை
உரு
பதி
தார்.
இ
அரபு

## பின்னணிப் பாடகி கல்பனா உயிர் மாய்க்க முயற்சி



(டில்லி)

பிரபல பின்னணிப் பாடகியான கல்பனா தனது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

44 வயதான கல்பனா, ஐதராபாத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் அதிகளவான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு சுயநினைவற்ற நிலையில் இருந்துள்ளார் எனவும் இதனையடுத்து அங்கு வந்த அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்பனாவின் வீடு சில நாட்களாக திறக்கப்படாமல் இருந்துள்ளதால் சந்தேகமடைந்த குடியிருப்புவாசிகள் வீட்டின் கதவை திறந்து பார்த்த போது குறித்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் கல்பனா தற்போது ஆபத்தான கட்டத்தைக் கடந்துள்ளார் எனவும் அவருக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் கல்பனாவின் கணவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல்

# 12 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள இராணுவத் தளம் மீது தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த இராணுவ தளத்தின் சுவர் மீது வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட 2 கார்களை மோதி வெடிக்க வைத்தனர்.


இதனால் சுற்றுச்சுவர் இடிந்த நிலையில் மற்ற தீவிரவாதிகள் இராணுவ தளத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

காரில் நிரப்பப்பட்ட குண்டுகள் வெடித்ததில் 4 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 12 பேர் பலியானார்கள். 30 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இராணுவத் தளத்துக்குள் புகுந்த தீவிரவாதிகளுடன் பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இதில் 6 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து இராணுவ தரப்பில் கூறும் போது, கார் குண்டுத் தாக்குதலுக்கு பிறகு இராணுவ தளத்தின் சுவர் உடைக்கப்பட்டு, பல தீவிரவாதிகள் உள்ளே நுழைய முயன்றனர். அவர்களில் 6 பேர் கொல்லப்பட்டனர். மீதமுள்ளவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு உள்ளனர்.

அனைத்து பயங்கரவாதிகளும் அழிக்கப்படும் வரை நடவடிக்கை தொடரும் என்று இராணுவம் தெரிவித்தது. (நி-8)



(டோக்கியோ)

ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவு ஒரு வாரமாக எரியும் காட்டுத்தீயை அணைக்க 2000 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

உலக நாடுகளில் காட்டுத்தீ மிகவும் மோசமான சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் ஜப்பானிலுள்ள ஒபுனாட்டோ காட்டுப் பகுதியில் 2100 இற்கும் அதிகமான ஹெக்ரேயர் பரப்பளவில் காட்டுத்தீ கொழுந்துவிட்டு எரிகிறது.



காட்டுத்
ளமான வ
ந்து சாம்பலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## கட்டியெழுப்பப்படும்”
# திட்டத்திற்கு
## அரபுத் தலைவர்கள்



திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

அமெரிக்கா காசாவை "கையகப்படுத்தி" இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்களை வெளியேற்ற வேண்டும் என்ற ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் யோசனைக்கு போட்டியாக இந்த ஒப்புதல் வந்துள்ளது.

முன்னதாக போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள காசா பகுதியைக் கட்டியெழுப்பி, அங்கு நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்து இருந்தார்.

இவரது இந்த அறிவிப்புக்கு அரபுத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

பாலஸ்தீன அதிகாரசபை காசாவை ஆளும் வாய்ப்பு இன்னும் உறுதியாகவில்லை. எனினும் இஸ்ரேல் அந்த அமைப்பின் எதிர்காலத்தை நிராகரித்தது. மேலும் ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தின் போது வோஷிங்டனில் இருந்த பாலஸ்தீன விடுதலை அமைப்பின் அலுவலகத்தை மூடிவிட்டு இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் மீண்டும் ஆட்சிக்கு திரும்பிய டொனால்ட் ட்ரம்ப், சிறிது நேரத்திலேயே, அமெரிக்கா காசா பகுதியை கையகப்படுத்த பரிந்துரைத்தார்.

மேலும், பாலஸ்தீன மக்களை எகிப்து அல்லது ஜோர்தானுக்கு இடம்பெயர கட்டாயப்படுத்தினார். இவரது கருத்து உலகளவில் பெரும் எதிர்ப்பை தூண்டியது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கெய்ரோவில் நடந்த அரபு லீக் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ட்ரம்பின் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தை அரபுத் தலைவர்கள் முன்மொழிந்துள்ளனர். முன்னதாக ஜனாதிபதி ட்ரம்பின் கருத்தை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரவேற்பதாக தெரிவித்து இருந்தார்.

உச்சிமாநாட்டின் நிறைவில், "விரிவான அரபுத் திட்டம்" ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த திட்டத்திற்கு சர்வதேச சமூகம் ஆதரவை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது. (நி-8)

## செர்பிய பாராளுமன்றத்தில் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு




(செர்பியா)

செர்பிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் புகை குண்டுகள் மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதைத் தொடர்ந்து மிகப்பெரிய பதற்றமான நிலை ஏற்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கு மத்தியில், ஒரு சட்டமன்ற உறுப்பினர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் செர்பியாவின் கடுமையான அரசியல் நெருக்கடியை எடுத்துக் காட்டுகிறது.

அங்கு ஒரு ஜனநாயக அரசாங்கம் பல மாதங்களாக ஊழல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் செர்பியாவின் நோவி சாட் நகர ரயில் நிலையத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 15 பேர் உயிரிழந்ததையடுத்து, நான்கு மாதங்களாக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் பலர், ஜனாதிபதி அலெக்சாண்டர் வூசிக்கின் தசாப்த கால ஆட்சிக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது.


இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாயன்று சட்டமன்றக் கூட்டத்தொடரில், செர்பிய முற்போக்குக் கட்சி தலைமையிலான ஆளும் கூட்டணி நிகழ்ச்சி நிரலுக்கு ஒப்புதல் அளித்த பின்னர், சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தங்கள் இருக்கைகளில் இருந்து பாராளுமன்ற சபாநாயகரை நோக்கி ஓடிச்சென்று பாதுகாவலர்களுடன் மோதலில் ஈடுபட்டனர்.

ஏனையவர்கள் புகை மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

1990 இல் பல கட்சி ஜனநாயகம் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து பல தசாப்தங்களில் பாராளுமன்றத்துக்குள் கறுப்பு மற்றும் இளஞ்சிவப்பு புகை மூட்டுவதை ஒரு நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. (நி-8)

## ஜப்பானில் பற்றி எரியும் காட்டுத்தீ!

- ❖84 வீடுகள் சேதம்
- ❖சுமார் 4000 பேர் வெளியேற்றம்
- ❖சாம்பலான வனப்பகுதி
- ❖2000 இற்கும் அதிக தீயணைப்பு வீரர்கள் களத்தில்



எரிகிறது.

காட்டுத்தீயினால் ஏராளமான வனப்பரப்பு எரிந்து சாம்பலான நிலையில், 80 இற்கும் மேற்பட்ட கட்ட டங்கள் சேதம் அடைந்துள்ளன.

இதுகுறித்து அந்நாட்டு பேரிடர் மேலாண் அமைப்பு அதிகாரிகள் கூறியதாவது,

50 ஆண்டுகளில் இல்லாத தீ தற்போது பரவி வருகிறது. 84 வீடுகள் முழுமையாக சேதம் அடைந்துள்ளன. 4,000 இற்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

'2000 இற்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர்.


காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்த ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

16 இற்கும் மேற்பட்ட ஹெலி கொப்டர்கள் மூலம் நீரை பீய்ச்சி அடித்து காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார், முல்லை மாவட்டங்களுக்கு தீயணைப்புப் படை இல்லை

## சுட்டிக்காட்டிய செல்வம் எம்.பி



(கிளிநொச்சி)

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் தீயணைப்புப் படை இல்லாத காரணத்தினால் திடீரென்று ஏற்படும் தீ விபத்துகளினால் பெரும் சிக்கல்களை எதிர்நோக்க • வேண்டி இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக அணைப்பதற்கு இம்மாவட்டங்களில் தீயணைப்புப் படை இல்லை.

வவுனியா அல்லது யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தே தீயணைப்புப் படை வந்து தீயை அணைக்க வேண்டிய நிலை உள்ளது.

இதனை அரசு கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் தீயணைப்புப் படையை உருவாக்க வேண்டும்.

எனவே இரு மாவட்டங்களுக்கும் தீயணைப்புப் படையை உருவாக்க வேண்டும் இது பற்றி கேட்டு இருந்தோம். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 180 | 100-120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 1400 | 500-600 |
| தக்காளி | 150 | 140 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 280 | 250 | 200-250 |
| கோவா | 300 | 250 | 300 | 250 |
| கரட் | 850 | 600-900 | 800 | 720 |
| பூசணி | 120 | 150 | 120 | 80 |
| புடோல் | 150 | 140 | 180 | 120 |
| வாழைக்காய் | 160 | 100 | 120 | 100-120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 145 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 350-400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 300 | 200-250 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 250 | 180-200 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 250 |
| பீற்றூட் | 150 | 150 | 200 | 150 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 400-500 |
| முருங்கைக்காய் | --- | 2000 | 2400 | 2000 |
| போஞ்சி | 150 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 60-70 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 200 | 150-250 |
| இராசவள்ளி | 450 | 400 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 100 | 50-100 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 85 | 130 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 70 | 50 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 |

## இன்று ஒரு தகவல் 335

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# வறுமையின் விலை!

ஒரு ஊரிலே இமாம் என்று ஒருவர் இருந்தார். அவர் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். பல வெளியூர்களிலிருந்தெல்லாம் புதுத் துணி வகைகள் அவர் கடைக்கு வரும்.

புதுப்புது ரகம் எல்லாம் வரவழைப்பார். விற்பனை செய்வார். இது அவருடைய தொழில். ஒரு நாள் அவருடைய கடைக்கு வயதான அம்மா வந்தார். ஒரு பழைய பட்டுச் சேலையை எடுத்துக் கொண்டு வந்தார்.

அதை இந்த இமாமிடம் காட்டி ஐயா! இந்த பழைய சேலையை விலைக்கு வாங்க முடியுமா என்று கேட்டார். அந்தக் கடையிலே வேலை செய்கின்ற ஊழியர் ஒருவர் இதை வேடிக்கையாகப் பார்த்தார். இந்த அம்மா விபரம் தெரியாமல் இப்படி கேட்கின்றாரே என்று.

ஆமாம் புதுப்புடவை வியாபாரம் செய்பவர்கள் யாராவது பழைய புடவையை விலைக்கு வாங்குவார்களா? அது தான் இப்படி வேடிக்கையாகப் பார்த்தார். சரி இமாம் என்ன சொல்லப் போகின்றார் என்று அவரையே கவனித்தார்.

இமாம் அந்த மூதாட்டியை ஒரு தடவை ஏறஇறங்கப் பார்த்தார். அதன்பின் கேட்டார். அம்மா இதற்கு எவ்வளவு தொகை வேண்டும் என்று. இதற்கு நூற்றுஇருபது திர்ஹம் வேண்டும் என்றார் அந்த அம்மா. அதைக்கேட்ட இமாம் லேசாக சிரித்துக் கொண்டே தன்னுடைய ஊழியரைப் பார்த்தார்.

இந்த அம்மாவிற்கு 400 திர்ஹம் கொடுத்தனுப்பு என்றார். அந்தப் பணியாளருக்கு மிகவும் ஆச்சரியம். என்ன இது அந்த அம்மா பழைய சேலையைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 120 திர்ஹம் வேண்டும் என்று கேட்டார். இவர் 400 திரிஹம் கொடுத்தனுப்ப சொல்கிறார் ஒன்றும் புரியவில்லை என்று யோசித்துக் கொண்டே என்ன சொன்னீர்கள் என்ற மாதிரியே இமாமைப் பார்த்தார்.

ஆமாம் அவர்களுக்கு 400 திர்ஹம் கொடுத்தனுப்பு என்றார் அவர். இவர் மெதுவாகக் கேட்டார். ஏன் இதற்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்றார். அந்த பழைய புடவையை பார்த்துக் கொண்டே இப்போது இமாம் சொல்கின்றார். பேசாமல் நான் சொன்னதை செய் போ! நீ அந்தத் துணியைப் பார்க்கின்றாய். நான் அந்த ஏழையின் வறுமையைப் பார்க்கின்றேன் என்றார். அதன்பின் அந்த ஊழியர் மறுவார்த்தை பேசவில்லை. பணத்தைக் கொண்டு வந்து அந்த அம்மாவிடம் கொடுத்தார். அந்த அம்மாவின் மனது நிறைந்தது. வறுமைக்கு விலை ஏது?

அது எல்லோருக்கும் புரியாது. பெரியவர்களுக்குத் தான் புரியும். அது புரிந்ததனாலே தான் அந்தப் பெரியவர் அப்படி நடந்து கொண்டார். நற்பண்புகள் யாவை? என்று நபிகள் நாயகமிடம் கேட்டார்களாம். அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

ஒற்றுமையாக இருப்பது, நல்ல காரியங்களைச் செய்வது, தர்மம் புரிவது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளியைச் சென்று பார்ப்பது , நல்லவரா கெட்டவரா என்று பார்க்காமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது, முஸ்லிமா? முஸ்லிம் அல்லாதவரா? என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்து கொள்வது, முதியவர்களுக்கு மரியாதை செய்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளை தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதை தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாய் நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது இதெல்லாம் தான் நற்பண்புகள் என்கிறார் நபிகள் நாயகம்.

இப்படிப்பட்ட நற்பண்புகளிலே ஒன்று தான் இமாம் அந்த மூதாட்டிக்குச் செய்த உதவி. நமக்கு வேண்டப்பட்டவர்களிலே இப்படிப்பட்ட பண்பாளர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது.

நமக்கு வேண்டிய ஒரு கடைக்காரர். அவர் கடையிலே இல்லாத நேரம் பார்த்து ஒரு ஆள் வந்தார். வேலைக்காரப் பையனைப் பார்த்து ஒரு கோழி இருக்கிறது விலைக்கு வாங்குவீர்களா? என்று கேட்டார். எவ்வளவு என்று கேட்டான் அவன். பத்து ரூபாய் தான் என்றான் இவன்.

விலை மிகவும் குறைவாக இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டு சரி கோழியைக் கொடு என்றான். உடனே ஒரு பேப்பரை பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான் இவன். அவன் கோழி எங்கே என்றான். அந்தப் பேப்பரிலே போட்டிருக்குப் பார் என்றான் இவன். அவன் பார்த்தான். அதிலே கோழிப் படம் போட்டிருந்தது. சரி இந்தா பத்து ரூபாய் என்று ஒரு சீட்டை கொடுத்தான். இவன் அதை வாங்கிப் பார்த்தான். பார்த்தால் அதிலே பத்து ரூபாய் என்று எழுதி இருந்தது. பேசாமல் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

இது நடந்து சிறிது நேரத்திற்குப்பின் கடை முதலாளி திரும்பி வந்தார். கடையிலே இருந்த பையன் நடந்த விபரத்தைச் சென்னான். கடைசியிலே நானும் ஒரு சீட்டிலே பத்து ரூபாய் என்று எழுதிக் கொடுத்து விட்டேன் என்றான்.

இதைக் கேட்டதும் அந்தக் கடைக்காரர் பளார் என்று அறைந்து விட்டார் அந்தப் பையனை. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.நான் என்ன தவறு செய்தேன் முதலாளி என்று கேட்டான். பத்து ரூபாய் என்று ஏன் சீட்டிலே எழுதிக் கொடுத்தாய். இப்போது அந்த சீட்டு வேஸ்ட் தானே. அதை வாயாலே சொல்லியிருக்கலாமே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் பொலிஸாரால் முற்றுகை

## புதுக்குடியிருப்பில் சம்பவம்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நால்வர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத்தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையினை முன்னெடுத்து இருந்தனர்.

இதன்போது 22 பரலும் கோடாக்கு பயன்படுத்தும் சுருள், கோடா என்பனவற்றையும் கைப்பற்றியிருந்தனர்.

மன்னாகண்டல், 10 ஆம் வட்டாரம், தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, வெள்ளப்பள்ளம் போன்ற பல்வேறு பகுதிகளில் களமிறங்கி தேடுதல் பணியின் மூலமே இவ்வாறு 4 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். குறித்த சந்தேக நபர்களை நேற்று முன் தினம் முல்லைத்தீவு நீதி மன்றத்தில் முற்படுத்திய போது கசிப்பு உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஒரு லட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன்,

ஏனைய மூவரும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (6-8-299)



யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் RITA FERNANDO.REVAL (இத்தாலி) ஞாபகார்த்தமாக பழைய மாணவன் எஸ்.செல்வகஜீபனால் கட்டப்பட்ட மரச்செதுக்கல் ஆலய திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

# போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து போதை மாத்திரை வியாபாரம் செய்யப்படுவதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜயசோமமுனி அறிவுறுத்தலின் கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெய திலக தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந் தேகத்திற்கிடமான குறித்த வீட்டை சுற்றி வளைத்து சோதனை மேற் கொண்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 180 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த 20 மற்றும் 29 வயதுடைய இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். முதற்கட்ட விசாரணைகளில் குறித்த போதை மாத்திரைகள் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)


# தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

01) **பதவி :-களஞ்சியப்பொறுப்பாளர்(நிரந்தரம்) ஆண்- ஒருவர்**
**குறியீட்டு இலக்கம் :-202/12**
**சம்பள அளவுத்திட்டம்:- 18820-170x10-185x10-22370**
**சுற்றுநிருப இலக்கம் :-02/2022 படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**

**தகைமைகள் :-**

1. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் களஞ்சியப்பொறுப்பாளர்/கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப்பரீட்சையில் சித்தி/ க.பொ.த. உயர்தரப்பத்திரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

3. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 6 திறமைச்சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்த 04 ஆண்டு கால அனுபவம்.

02) **பதவி :-களஞ்சிய முகாமையாளர் (நிரந்தரம்) இருவர்(ஆண்கள்) (வடிகலன் இயக்குனர்கள்)**
**குறியீட்டு இலக்கம் :-208/14**
**சம்பள அளவுத்திட்டம் :-17900-155x10-165x10-21100**
**சுற்றுநிருப இலக்கம் :-02/2022படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**

**தகைமைகள் :-**

1. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது
2. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி,கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

03) **பதவி :-எழுதுனர் (நிரந்தரம்)-ஒருவர்**
**குறியீட்டு இலக்கம் :-302/15**
**சம்பள அளவுத்திட்டம் :- 17435-145x10-160x10-20485**
**சுற்றுநிருப இலக்கம் -02/2022படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**
**தகைமைகள் :-**

1.கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர்/காசாளர்/கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி

04) **பதவி :-அலுவலக உதவியாளர் (நிரந்தரம்) -ஒருவர்**
**குறியீட்டு இல :- 317/16**
**சம்பள அளவுத்திட்டம் :-16975-135x10-150×10-19825**
**சுற்றுநிருப இலக்கம் :-02/2022படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**
**தகைமைகள் :-**

1. கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்த 1 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

2.கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

05) **பதவி :-காவலாளி (நிரந்தரம்) ஒருவர்**
**குறியீட்டு இல :-315/16**
**சம்பள அளவுத்திட்டம் :-16975-135x10-150×10-19825**
**சுற்றுநிருப இலக்கம் :-02/2022படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**

**தகைமைகள் :-**

1. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

அல்லது

2. 05 ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

06) **பதவி :-தொழிலாளி (நிரந்தரம்)-ஒருவர்**
**குறியீட்டு இல :-818/17**
**சம்பள அளவுத்திட்டம்:- 16515-130x10-145x10-19265**
**சுற்றுநிருப இலக்கம் :-02/2022படியான (15,000 ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்)**
**தகைமைகள் :-**

05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்

**பொதுவான நிபந்தனைகள்**

- வயதெல்லை 18-45 வயதிற்கு உட்பட்டவர்கள்
- தற்போது கூட்டுறவு நிறுவனாங்கலில் பணிபுரிபவராயின் வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது
- கொத்தணி எல்லைப்பரப்பிற்குள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் தற்போது பணியாற்றுபவர்களாயின் அச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்
- பதவிக்கு தெரிவு செய்யப்படின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைவாக நிர்வாகசபையால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும், ஆதாரப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.
- எழுதுனர் கணனியை பயன்படுத்தும் பயிற்சியை பெற்று பயன்படுத்துதல் வேண்டும்.
- தேவையான அனைத்து ஆவணங்களையும் பிரதிசெய்து இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைந்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்காங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி வரணி எனும் முகவரிக்கு குறிப்பிட்ட திகதிக்கு பிந்தாது அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 20.03.2025 வரை மட்டுமே.
- காலத்திற்கு காலம் புதிதாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

**தலைவர்**

(பி-2383)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 718





அந்த வாணர் குலத்து வந்தியத்தேவரைப் போன்ற தீரரை நான் பார்த்ததேயில்லை. எத்தனையோ விதமாக அவரைச் சோதித்தேன் எல்லாவற்றிலும் தேறி விட்டார். அவர் இப்போது எங்கே அக்கா?"

குந்தவையின் முகச் சந்திரனை மறைத்திருந்த மேகத்திரை சிறிது அகன்றது. பவள இதழ்கள் முத்துப் பற்கள் தெரியும்படி புன்னகை பூத்து, "தம்பி! அவரைப் பற்றி இப்போது என்ன கவலை? வேறு எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன!" என்றாள்.

"என்ன அப்படிப் பேசுகிறாய், அக்கா! உனக்கு அதிருப்தி அளிக்கும்படி நடந்து கொண்டாரா?"

"இல்லை, இல்லை! நான் ஏன் அதிருப்தி அடைய வேண்டும்? உன்னை அழைத்துக் கொண்டு வந்து சேர்ப்பதாக வாக்களித்தார். அந்த வாக்கை அவர் நிறைவேற்றி விட் டார்.!"

"அதற்காக அவர் செய்த தந்திர மந்திரங்களையும், கைக்கொண்ட சூழ்ச்சி வித்தைகளையும் நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவர் எங்கே, அக்கா! நீ இங்கு வந்திருக்கிறரய் என்று தெரிந்ததும், வந்தியத்தேவரும் உன்னுடன் வந்திருப்பார் என்று எண்ணினேன். எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் இந்த பெண்ணரசி அல்லவா வந்திருக்கிறாள்?"

"இவள் எவ்வளவு தைரியசாலி ஆகிவிட்டாள் என்பது உனக்குத் தெரியாது, தம்பி! நேற்று நமது முதன் மந்திரியின் யானை இவளைத் தன் துதிக்கையால் தூக்கி எறிந்தது. மேலே அம்பாரியில் இருந்த என் மடியிலே தான் எறிந்தது. ஆனால் அது அவளுக்குத் தெரியாது! அப்போது எவ்வளவு தைரியமாக இருந்தாள் என்பதை நீ பார்த்திருந்தால்." "போதும், உன்னுடைய தோழியின் புகழை நிறுத்திக் கொள்! என் நண்பரைப் பற்றிச் சொல்!"

"அவரைப் பற்றி என்ன சொல்வது? அவர் வந்த காரியம் ஆகிவிட்டது. திரும்பி அவருடைய எஜமானன் ஆதித்த கரிகாலனிடம் போய் விட்டார்." "அப்படியானால், அவர் வாக்குத் தவறிவிட்டார். தாம் காஞ்சிக்குப் போகப் போவதில்லையென்றும், சோழ நாட்டிலேயே இருந்து விடப்போவதாகவும் கூறினாரே?"

"அது எப்படிச் சாத்தியம்? சோழ நாட்டில் இருந்து அவர் என்ன செய்வது? இங்கே உள்ளவர்களின் கதியே நாளைக்கு என்ன ஆகும் என்று தெரியாமலிருக்கிறது. அவர் பேரில் உனக்கு அவ்வளவு பிரியமாயிருந்தால், சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவருடைய முன்னோர்கள் ஆண்ட சிற்றரசை அவருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி செய்து விட்டால் போகிறது!"

"சிற்றரசை வைத்துக் கொண்டு அந்த மகாவீரர் என்ன செய்வார், அக்கா?"

"எல்லாச் சிற்றரசர்களும் என்ன செய்கிறார்களோ, அதை அவரும் செய்கிறார்! நீதான் இலங்கா இராஜ்யம் வேண்டாம் என்று மறுத்தாய். அதுபோல் அவரும் வேண்டாம் எனச் சொல்லுவார் என நினைக்கிறாயா?"

இளவரசன் இளநகை புரிந்த வண்ணம், "அக்கா! இலங்கை இராஜ்யம் வேண்டாம் என்று நான் சாட்சிகள் வைத்துக் கொண்டு மறுத்திருக்கிறேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நன்றி மறவாமை



ஒரு சிறிய கிராமத்தில் கருணை மனம் கொண்ட ஓர் அந்தணன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஒரு நாள் தன் வேலையை முடித்துக்கொண்டு அருகிலிருந்த கிராமத்திலிருந்து அவன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு சிறு கீரிப்பிள்ளை தன் தாயின் உயிரற்ற உடலருகில் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"ஐயோ பாவம் ! நான் இப்போது இங்கேயே இந்த கீரிப்பிள்ளையை விட்டுச்சென்றால் இது இறந்து விடும்," என்று எண்ணிய அந்தணன் அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

"கௌரி, இந்தச் சிறிய பிராணியை நான் வரும் வழியில் கண்டேன். நாம் அதை வளர்க்கலாம். என்று தன் மனைவியிடம் கூறினான்."

அப்படியே செய்யலாம். நம்முடைய குழந்தையுடன் சேர்த்து நான் கீரியையும் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன்," என்று உறுதி அளித்தாள் அவன் மனைவி. அந்தணனும் அவன் மனைவியும் கீரியின் மீது அன்பும், அக்கறையும் காட்டி வளர்த்தனர்.

அவர்களுடைய குழந்தையோடு கீரியும் தொட்டிலில் ஒன்றாகத் தூங்கியது பால் குடித்தது தவிர தினமும் குழந்தையுடன் விளையாடியது.

பிள்ளை அந்தணன் வீட்டில் நாட்களை மிகவும் மகிழ்ச்சியாகக் கழித்தது. கீரியும் அக்குழந்தையும் வளர வளர நட்பு சகோதரப் பாசமாக உருவெடுத்தது. அந்தக் கீரி குறிப்பாக அவர்களுடைய பராமரிப்பில் வேகமாக வளர்ந்தது.

திடீரென்று அந்தணனின் மனைவிக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. என்ன இருந்தாலும் இது ஒரு முரட்டுப் பிராணி. விரைவிலேயே தன்னுடைய சுய உருவத்தைக் காட்டுமோ? என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

இப்போதெல்லாம் கீரியின் படுக்கையைச் சற்றுத் தொலைவில் விரித்தாள். தன் குழந்தையோடு அது விளையாடும் போதெல்லாம் அதிக எச்சரிக்கையோடு அதைக் கவனித்தாள். அந்தணன் ஒரு நாள் வெளியில் சென்றிருந்தான்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் சமமாய் இருக்கும் போதே நமது நேர்மையை மற்றவர் உணர்வர். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவகப் பிரதேசம் புறநீங்கலா?

எங்கள் தமிழர் தாயகம் பற்றிய எண்ணம் எம்மிடம் மிகுந்திருக்குமாயின், அங்கு தனித்து எமது உரிமை என்பதை மட்டும் நாம் உச்சரித்துக் கொண்டிருக்க முடியாது.

மாறாக, எம் இனத்தின் உரிமை பற்றிய கருசனையோடு எங்கள் மக்களின் வாழ்வாதாரம், எங்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் கல்வி, சமூக, பொருளாதார பண்பாட்டு விழுமியங்கள் எனப் பல்வகை விடயங்களில் நாம் கருசனை கொள்ள வேண்டும்.

எனினும் எங்களின் சமகால அரசியல் நீரோட்டம் என்பது தமிழ் மக்களின் உரிமை பற்றிக் கதைப்பதும் படையினருக்கு எதிராகப் பேசுவதும் மட்டுமே என்பதாயிற்று.

ஆனால், எம் இனத்தின் உரிமை என்ற விடயத்துக்குச் சமாந்தரமாக எங்கள் தாயகத்தின் அபிவிருத்தி பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எனினும் அதுபற்றி நம்மவர்கள் அக்கறையற்றவர்களாக உள்ளனர்.

இங்கு நம்மவர்கள் என்ற சொற்பதம் தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ் அதிகாரிகளையும் கல்வி சார் புலமையாளர்களையும் துறைசார் நிபுணர்களையும் குறிப்பதாகும்.

நேற்றைய தினம் (05) நெடுந்தீவுப் பிரதேசத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடமாடும் சேவை இடம்பெற்றது.

உண்மையில் நெடுந்தீவில் நடமாடும் சேவையை ஏற்பாடு செய்த வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தைப் பாராட்ட வேண்டும்.

பொதுவில் நம் வடக்கு மாகாண நிர்வாகம் தீவகத்தைப் புறந்தள்ளிவிட்டது என்ற கருத்தியல் மக்களிடம் உண்டு.

தவிர, தீவகம் என்பது வடக்கு மாகாண நிர்வாகத்துக்குள் அடங்காத பிரதேசம் போலவும் கருதப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மேற்கொண்ட நடமாடும் சேவை நெடுந்தீவு மக்களுக்கு மிகுந்த நன்மையைக் கொடுத்திருக்கும் என நம்பலாம்.

உண்மையில், தீவகத்தில் கடலால் சூழப்பட்ட இடங்களில் வாழுகின்ற மக்கள் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக, நெடுந்தீவில் இருக்கக்கூடிய வீதிகளின் நிலை அந்த மக்களின் பரிதாபத்தைச் சுட்டிநிற்கும்.

இதற்கும் மேலாக, அந்த மாணவர்களின் கல்வி என்பது யாழ்ப்பாணத்து மாணவர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

எனவே வடக்கு மாகாண நிர்வாகம் தீவகத்திலுள்ள மக்களின் நலன் தொடர்பில் அதீத கருசனை கொள்ள வேண்டும்.

ஆம், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய நிலங்களை விடுவியுங்கள்.

அங்கு மக்களை மீளக் குடியமர்த்துங்கள் என்று நாம் கேட்கின்ற அதேநேரம், நம்பிக்கையோடு மீளக்குடியமர்ந்த தீவகத்து மக்களுக்கு வடக்கு மாகாண நிர்வாகம் என்ன செய்தது என்பதை நம் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வெளிப்படுத்த வேண்டும்.

ஆக, கடந்த காலத்தைப்போல தீவகத்தை புறநீங்கல்படுத்தாமல் தீவகத்தின் அபிவிருத்தி பற்றி அதீத கருசனை காட்டுங்கள்.

இதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

### பாராளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன்

எமது கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் இந்திய மத்திய அரசு மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்துடன் கலந்துரையாட வேண்டும். இந்தப் பிரச்சினையைக்காரணமாகக் கொண்டு இந்தியாவுடன் முரண்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. இதில் சீனாவின் தலையீடும் இருந்து வருகிறது என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

போர்க்காலத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் எமது மீனவர்களின் வாழ்க்கை மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறது.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகு பிரச்சினை அங்கு பூதாகரமாக வெடித்திருக்கிறது. மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்கு காப்புறுதித் திட்டம் ஒன்று கூட இதுவரை இல்லாமல் இருக்கிறது. அதனால் மீனவர்கள் தங்களின் உடைமைகளை இழக்கும்போது அதற்கான இழப்பீட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ளாமல் இந்திய டோலர்கள் கடல் எல்லைக்குள் வருவதை நிறுத்த நடவடிக்கை எடுத்தால், அவர்களின் பிரச்சினைக்கு மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு தயாராக இருப்பதாக எமது மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக நாங்கள் முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துக் கலந்துரையாடியபோது ஆழ்கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என நாங்கள் ஆலோசனையாகத் தெரிவித்திருந்தோம்.

அதனால் அரசாங்கம் இந்தப் பிரச்சினை குறித்து கலந்துரையாட தமிழ் நாடு மற்றும் இந்திய மத்திய அரசாங்கத்துடன் கலந்துரையாட நடவடிக்கை எடுங்கள். அதற்கு நாங்கள் எமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறோம். அப்போது இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க வருவதற்கான வழிமுறையை நாங்கள் தெரிவிப்போம்.

அதனால் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

## நீர்வேலியில் வாழைக்குலை தராசுக்கு சீல் வைப்பு

வலி. கிழக்கு நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க வாழைக்குலை நிறுத்தல் கருவி (தராசு) ஒன்றுக்கு மாவட்ட நிறுத்தல் அளவுகள் கண்காணிப்பு அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வாழைக்குலை உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் பல வருடங்களாக வாங்கப்பட்டு வருகிறது.

குறித்த சங்கம் தொடர்பில் காலத்துக்கு காலம் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் தற்போது நிறுத்தல் கருவி முத்திரையிடப்படாமல் பாவிக்கப்படுவதாக யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் நிறுத்தல் அளவுகள் அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்குச் சென்ற அதிகாரிகள் அங்கு வாழைக்குலைகள் நிறுப்பதற்கான கருவிகளை பரிசோதனையிட்டனர்.

இந்நிலையில் ஒரு நிறுத்தல் கருவி பல வருடங்களாக முத்திரையிடப்படாமல் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த கருவிக்கு சீல் வைக்கப்பட்டது. (ம-7)

## வவுனியாவில் விரைவில் அரச மருந்தகம்

வவுனியாவில் அரசாங்க மருந்தகம் விரைவில் திறக்கப்படும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தன்னிடம் உறுதியளித்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, கடந்த மாதம் பாராளுமன்ற அமர்வின் போது வவுனியா மாவட்டத்தில் அரசாங்க மருந்தகம் ஒன்றினைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இதனால் குறைந்த விலையில் மக்கள் மருந்துகளை வாங்க முடியும் என்றும் கோரிக்கை வைத்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து நாடெங்கிலும் அரசாங்க மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்களில் மருந்தகங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சு மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயத்தை மீண்டும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இதன்போது வவுனியாவில் விரைவில் அரசாங்க மருந்தகம் திறக்கப்படவுள்ளதாக அமைச்சர் உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார். (ம-7,250)

### க.பொ.த சாதாரண தர

## பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டியேற்பட்டால் அதனை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக ஒன்லைன் ஊடாக சமர்ப்பிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கானவசதியினை WWW.Doenets.lK என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்ற 4 இலட்சத்து 74 ஆயிரத்து 147 பரீட்சார்த்திகள் தகுதிபெற்றுள்ளனர்.

பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை 3 ஆயிரத்து 663 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. (ம-7)

## யானை தாக்கியதில் பாகன் உயிரிழப்பு

ஹபரண பகுதியில் பராமரித்து வந்த யானை தாக்கியதில் 26வயது பாகன் உயிரிழந்துள்ளார்.

பொடி ராஜா எனப் பெயர் கொண்ட இந்த யானையை உயிரிழந்த பாகன் ஆறு வருடங்களாகப் பராமரித்து வருகிறார்.

நேற்று முன் தினம் மதியம் ஹபரண பகுதியில் உள்ள யானை குளிக்கும் இடத்தில் அவர் குளித்துக்கொண்டிருந்த போது யானையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசிபலன்கள்-2025



கிரகநிலை - இராசியில் சூரியன், சந்திரன், சனி -தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - சுக ஸ்தானத்தில் குரு -பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் -அஷ்டம ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் குணமுடைய கும்ப ராசியினரே! இந்த மாதம் எல்லா காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சுக்கிரன் சஞ்சாரம் புதிய தொடர்புகளை ஏற்படுத்தும். திறமை வெளிப்படும். பலவகையிலும் முன்னேற்றம் உண்டாகும். செவ்வாய் சஞ்சாரத்தால் சொத்து தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப்படும். இடமாற்றம் உண்டாகும். சுப செலவுகள் ஏற்படும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதப்போக்கு காணப்படும். செலவும் அதிகரிக்கும். தேவையான பணவசதி கிடைக்கும். விரிவாக்கம் தொடர்பான முயற்சிகள் இழுபறியான நிலையில் இருந்து பின்னர் முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் தாமதப்படலாம். எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடும் முன்பு தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும்.

குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்கிடையே எதையும் பேசி தெளிவுபடுத்திக் கொள்வது நன்மை தரும். குழந்தைகளுக்கான பொருட்களை வாங்குவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். புதிய தொடர்புகளால் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம்.

கலைத்துறையினர்க்கு பொறுப்புகள் அதிகரிக்கும். உற்சாகமாக எதையும் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருந்து, கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள். கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல், வீண் பயம் குறையும். அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் சாமர்த்தியத்தைப் பெறுவீர்கள். அரசியல்துறையினர் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். வீண் செலவு உண்டாக்கும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடு




வதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். ஆன்மிக தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு உண்டாகும். திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும்.

## எதிர்பார்த்த பணம் வந்து சேரும்

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சுபீட்சமான நிலையிருக்கும். கணவன் மனைவியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படும் என்றாலும் ஒற்றுமை குறையாது. பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பதும் உற்றார் உறவினர்களை அனுசரித்து நடந்து கொள்வதும் மிகவும் நல்லது.

**சதயம்:** தொழில் வியாபாரத்தில் சிறப்பான இலாபம் அமையும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புடையவைகளாலும் அனுகூலம் கிட்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகைகளை தவிர்க்கவும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதால் அலைச்சல்கள் குறையும்.


**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றி மறையும். மறைமுக எதிர்ப்புகளை வெல்லக் கூடிய ஆற்றல் உண்டாகும். சற்றே அலைச்சல்கள். சுக வாழ்வில் சோதனைகள் ஏற்பட்டாலும் பண வரவுகள் தேவைக் கேற்றபடி அமையும். அசையும் அசையா சொத்துகளால் வீண் செலவுகள் உண்டாகும்.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் ஆஞ்சநேயரை வழிபட்டுவருவதால் மனதில் துணிச்சல் உண்டாகும். எதிலும் வெற்றி கிடைக்கும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16, 17

**அதிஷ்ட தினங்கள்:** 8, 9



கிரகநிலை - இராசியில்ராகு, சுக்கிரன், புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் ராசியில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** நீதி, நேர்மை, உண்மை என்று எப்போதும் பாடுபடும் மீன ராசியினரே! நீங்கள் எதிர்ப்புகளை எளிதில் வெல்வீர்கள். இந்த மாதம் எந்த ஒரு சின்ன விடயம் கூட இலாபமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் அதனால் கௌரவம் உண்டாகும். பூமி, வாகனம் மூலம் ஆதாயம் உண்டாகும். பண வரத்துக் கூடும்.

தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். வங்கியில் இருப்புக் கூடும். வாங்கிய கடனை திருப்பி செலுத்தி மனநிம்மதி அடைவீர்கள். தொழில் தொடர்பான பயணங்கள் வெற்றி கிடைக்கும். செயல் திறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாக செய்து முடித்து மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்க பெறுவீர்கள். அதிகாரம் செய்யும் பதவிகள் தேடிவரும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே சந்தோஷம் நிலவும். கஷ்டமில்லா சுக வாழ்க்கை இருக்கும். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும். நெடு நாளைய சங்கடம் தீரும். பெண்களுக்கு எல்லாவற்றிலும் இலாபம் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து கூடும். எதிர்ப்புகள் விலகும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

கலைத்துறையினர் வாக்குவன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். பயணங்கள் செல்ல நேரலாம். புத்திசாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். அரசியல்




துறையினருக்கு இருந்த குழப்பம் நீங்கும். மனவருத்தம் நீங்கும். தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வெளியூர் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். கவலை வேண்டாம். கடன் விவகாரங்களில் யோசித்து செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். ஆசிரியர்களின் பாராட்டும் கிடைக்கும்.

## மனமகிழ்ச்சி உண்டாகும்

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** தெய்வ தரிசனங்களுக்காக பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலையிருக்கும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். எதிர்பார்க்கும் உதவிகள் சில தடைகளுக்குப் பின் கிட்டும். கடன்கள் குறையும்.

**உத்திரட்டாதி:** பண வரவுகளுக்கு பஞ்சம் இருக்காது. எடுக்கும் காரியங்களில் வெற்றி கிட்டும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். பூர்வீக சொத்துக்களால் சிறு சிறு விரயங்கள் உண்டாகும். புத்திர வழியிலும் மனக்கவலைகள் ஏற்படும். பொருளாதார மேன்மை சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் யாவும் பூர்த்தியாகும்.

**ரேவதி:** தொழில் வியாபாரத்தில் சிறப்பான இலாபங்கள் அமையும். புதிய கூட்டாளிகள் சேருவார்கள். பணவரவுகள் தேவைக் கேற்றபடி இருக்கும். குடும்பத்தில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமண சுப காரியங்கள் தடைகளுக்கு பின் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். சொந்த பூமி, வண்டி வாகனம் போன்றவை வாங்கும் முயற்சிகளில் கவனம் தேவை.

**பரிகாரம்:** குல தெய்வத்தை பூஜை செய்து வணங்க எல்லாக் காரியமும் வெற்றியாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19, 20

**அதிஷ்ட தினங்கள்:** 10, 11

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

பட்டவராவார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையிலேயே குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## முல்லையைச்...

தீவு புதுக்குடியிருப்பைப் பூர்வீகமாகக் கொண்ட சின்னத்தம்பி கருணாகரன் (வயது-49) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்டபோது கார் ஒன்று மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## பாட்டியின்...

வீட்டில் வைக்கப்பட்டிருந்த மாத்திரையை எடுத்து குழந்தை உட்கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு திடீரென குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்டதனையடுத்து மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299,315)

## வடக்கின்...

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 118ஆவது பெருந்துடுப்பாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

இன்று வியாழன், நாளை வெள்ளி, நாளை மறுதினம் சனி என தொடர்ந்து மூன்று நாட்கள் இப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## யாழ்.பல்கலைக்...

(ஓய்வுபெற்ற சமூகவியல் பேராசிரியர்), இ.பத்மநாதன் (முன்னாள் பிரதம செயலாளர் நிதி), ஏந்திரி எஸ்.வினோதினி (பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்), ஏந்திரி. ஏ.சுபாகரன் (திட்டப்பணிப்பாளர், ஏசியா பவுண்டேசன்), வைத்திய நிபுணர் என்.சரவணபவ (மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் நிபுணர்), ஷெரீன் அப்துல் சரூர் (எழுத்தாளரும், பெண் உரிமைச் செயற்பாட்டாளர்), கலாநிதி எம்.அல்பிரட் (முன்னாள் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம்), ஏந்திரி அ. குணாளதாஸ் (பட்டயப் பொறியியலாளர்), என்.செல்வகுமாரன் (முன்னாள் பீடாதிபதி, சட்டபீடம், கொழும்பு), வனஜா செல்வரட்ணம் (பணிப்பாளர், வட மாகாண தொழிற்றுறை திணைக்களம்), டி.கே.பி.யூ.குணதிலக (முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை), எம். ஜே.ஆர்.புவிராஜ் (முன்னாள் பணிப்பாளர், திறைசேரி), பேராசிரியர் சி.சிவயோகநாதன் (வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகம்), பி. ஏ. சரத்சந்திர ( முன்னாள் அரச அதிபர், வவுனியா), க.பிரபாகரன் (சட்டத்தரணி), ஏ.எம்.பி.என். அபேசிங்க (மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், வடமத்திய மாகாணம்.)

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஒரு உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும்.

இம்முறை பேரவைக்கு சமய ரீதியில் உறுப்பினர்கள் நியமிக்கப்படாமை சமயத் தலைவர்கள் மத்தியில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.(ம-7,33)

## பாராளுமன்றத்...

பல நாட்கள் படகுகளுக்கு மானியமாக பாராளுமன்ற உறுப்பினர் வேதாராச்சி 42,000 மற்றும் 52,000 ரூபாய்களைப் பெற்றதாக அமைச்சர் தெரிவித்தையடுத்து, இந்த வாக்குவாதம் ஏற்பட்டது.

"நீங்கள் மானியங்களைப் பெற்றுக் கொண்டு பாராளுமன்றத்தில் பொய்களைச் சொல்கிறீர்கள். இது அநாகரிகமானது" என்று பிரதி அமைச்சர் கூறினார்.

"இந்தக் கருத்தை நிரூபிக்க எங்களிடம் அனைத்து ஆவணங்களும் உள்ளன. எங்களை எதிர்கொள்ளத் துணியாதீர்கள் என்று அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் வேதாராச்சி, ஒரு முறை மட்டுமே மானியம் பெற்றதாகக் கூறினார். எனக்கு மானியம் ஒரு முறை மட்டுமே வழங்கப்பட்டது. இருப்பினும், மாதாந்த மானியத்தைப் பெற எனக்கு உரிமை உண்டு என்று அவர் குறிப்பிட்டார். (ம-7)

## யாழில் இலஞ்சம்...

கினை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமல் தடுப்பதாகக்கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரியின் மகன் ஒருவர் 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இருப்பினும் அந்த வழக்கானது நீதிமன்றுக்குக் கொண்டு சென்ற நிலையில் அவருக்கான தண்டமாக 25 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபர் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் பொலிஸ் அதிகாரியின் மகன் ஒருவர் இலஞ்சம் பெற்றது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-7)

## 679...

களிலிருந்து தப்பியோடியவர்களுக்குத் தொடர்புள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதனால் தப்பியோடிய முப்படை வீரர்களைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டமையின் பிரகாரம் நாடு முழுவதுமுள்ள தப்பியோடிய முப்படை வீரர்கள் கைது செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சட்ட...

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுக்க இந்திய மத்திய அரசும் தமிழக அரசாங்கமும் சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

வடக்கு மக்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர். இந்த வாழ்வாதாரம் அவர்களிடமிருந்து பறிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு இந்திய அரசாங்கத்தையும் தமிழக மாநில அரசாங்கத்தையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உள்ளூர் மீனவர்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் போராட்டங்களை எடுத்துரைத்த அமைச்சர்,

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 5766
H 6 5 2 3 3 0
அத சம்பத H 2 3 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 0341
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1796
O 01 09 34 78 O
Double Chance 04799

மெகா பவர்
திகதி 05/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2114
R 25 35 44 51 69

ஜய JAYA
திகதி 2025.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 034
M 3 8 5 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4008
சீட்டிழுப்பு திகதி 05.03.2025
E 33 34 46 57
E
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 1075
ரிஷபம் 12 16 17 49 ரிஷபம்
20519 44

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.03.2025 வெற்றி வாரம் 474
Y 8 0 2 0 9 1
51648
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,899,226.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2740
சீட்டிழுப்பு திகதி 2025.03.05 தினம் புதன்கிழமை
24 56 57 59 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,249,413.60

சனிதா
திகதி 05.03.2025 வெற்றி வாரம் 4901
12 36 41 46 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,746,079.20
81690

ஜயோதா Jayoda
திகதி 2025.03.05 வெற்றி வாரம் 2109
04 15 17 38 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,217,268.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4452
சீட்டிழுப்பு திகதி 05.03.2025 தினம் புதன்கிழமை
06 38 48 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.16,602,889.20
228849

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 08 09 31 48 58
சீட்டிழுப்பு வாரம் 1916
05.03.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,460,436.20

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2566
சீட்டிழுப்பு திகதி : 2025.03.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,105,932.00
36 42 71 74 V
686243

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

G.C.E O/L 2024

## மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

**விஞ்ஞானம்**
ஆசிரியர்
S.கோபிநாத் SLTS, Spl.Trd (Science)

March 07 வெள்ளி மாலை 5.30 - 8.30 pm (Biology)
March 08 சனி மாலை 5.30 - 8.30 pm (Chemistry)
March 09 ஞாயிறு மாலை 3.30 - 6.30 pm (physics)

**ICT**
ஆசிரியர்
S.சஞ்ஜேவன் SLTS, B.Sc (Computer Science)

March 06 வியாழன் மாலை 6.00 - 8.30 pm
March 09 ஞாயிறு காலை 10.00 - 1.00 pm

- எதிர்பார்க்கை பகுதிகள் முழுமையாகக் கலந்துரையாடப்படும்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(C-2390)

தீபம் உயர் கல்விக் கல்லூரி, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 224 7781

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2388)

076 825 7716 (ஆகாஸ்)

UK BUSINESS VISITOR VISA
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
உங்கள் வியாபாரத்தினை
(பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே
நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- ✓ விசா விண்ணப்பங்கள்
- ✓ STALL BOOKING
- ✓ HOTEL BOOKING
- ✓ RETURN AIR TICKET
- ✓ பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்

தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777
(C-2389)

## மணமகள் தேவை

முல்லைத்தீவு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த திருவோண நட்சத்திரம் கொண்ட சொந்தத் தொழிலுடைய தோசமெதுவுமற்ற, தீய பழக்கம் அற்ற மணமகனிற்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :
077 033 7959
(3576)

## வேலைவாய்ப்பு

இளையோர், யுவதிகளுக்கான பயிற்சியுடன் கூடிய
வேலைவாய்ப்பு
O/L, A/L, பல்கலை மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 651 0375
(3585)


## 17 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்...



### மாமனிதர் கிட்டினன் சிவநேசன்

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
பொது முகாமையாளர்
(வட மாகாண ப.தெ. வ கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்)

ஆண்டு பதினேழு ஆனபோதும் எம் வரலாறு சொல்லும்
மாண்ட நின் புகழ் விஞ்சும் பேறுனதாம் என
ஈண்டிலங்கு தமிழ் சான்றோர்க்கே உரைக்கும்
மாண்புடை தாய் மண்ணின் மாமணியே நீ என.
அன்னாருடன் சாவடைந்த சாரதி பெரியண்ணன்
மகேஸ்வரராசா அவர்களையும் நினைவு கொள்கின்றோம்.

தாயின் மடியில் 21.01.1957
தாயக மண்ணில் 06.03.2008

குடும்பத்தினர்
மாமனிதர் சிவநேசன் அறக்கட்டளை நிதியம்
யாழ்ப்பாணம்
(C-2387)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1994 ஆம் ஆண்டு பிறந்த சூரியன் செவ்வாய், பூரட்டாதி நட்சத்திரம், அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

077 117 7174
077 834 0605
(3581)

## வேலையாள் தேவை


உரும்பிராயில் உள்ள உணவகத்திற்கு வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு :
076 314 4689
(3580)

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில்
அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
074 38 25 961
076 91 97 566
077 46 87 645
(3583)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## மரண அறிவித்தல்



பிறப்பு
21 - 03 - 1937

இறப்பு
05 - 03 - 2025

### கந்தையா வள்ளியம்மை

காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வள்ளியம்மை அவர்கள் நேற்று (05.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் லோகேந்திரா (காசி களஞ்சியம்), சந்தியேந்திரா (கிராம சேவகர்), சாரதாதேவி (தங்கம்), காலஞ்சென்ற கல்யாணி (ஆத்தை) மற்றும் யோகேஸ்வரி (Arpico Insurance) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலட்சுமி, மகாதேவன், பத்துமரஜ்சினி, சற்குணராசா, சுந்தரேஸ்வரன் (நல்லைக்குமரன் ரெக்ஸ், நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாந் (Keerthiga Pharmacy, Kaasi Trading (PVT) Ltd), கிரிஷாந் (Luxsmy Super market), கோபிகா (லண்டன்), கீர்த்திகா (யாழ்.பல்கலைக்கழகம்), கஜவதனா (கிளிநொச்சி), கஜவதனி (வவுனியா), கார்த்திகா, நவநிலா (யாழ்.பல்கலைக்கழகம்), பவித்திரா (ATI), ஜெனனி (யாழ்ரன் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2025) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 620 4189
077 613 9019

தகவல் :
குடும்பத்தினர்
(C-2391)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 06.02.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பாவிலுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

அவர்கள் எம்மை விட்டு நினையாப் பிரகாரம் பிரிந்த வேளை எமது இல்லம் வந்து எமக்கு பற்பல உதவிகள் புரிந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் இணையத்தளம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், பதாகைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் மேலும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எமது இல்லத்திலும் தேவமாதா ஆலயத்திலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உதவி புரிந்த அனைவருக்கும் எம் குடும்பம் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 08.03.2025 சனிக்கிழமை அன்று மதியம் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(895)

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

இங்ஙனம் : திருமதி சந்தியாப்பிள்ளை இந்துமதி
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.